## ஆண்டிபட்டி உதவி தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

**முன்னிலை:-திரு.க.சுதந்திரன், M.A.,M.Ed.,**

ந.க.எண்:120/ அ1/2012 நாள்: 20.02.2012

பொருள்: தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன்படி தகவல் கோரியது அனுப்புதல் - சார்பு.

பார்வை: அல்லிநகரம் திரு.வீரபாண்டியன் என்பாரது கடிதம் நாள்:10.02.2012

*****

பார்வையில் காணும் கடிதத்தின்படி அல்லிநகரம் திரு.வீரபாண்டியன் என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கோரப்பட்டுள்ள விபரங்களை கீழ்க்கண்டவாறு அனுப்பப்படுகிறது.

| | |
|---|---|
| 1. அரசு உதவி பெறும் பள்ளிகளில் அனைத்து தரப்பினருக்கும் இட ஒதுக்கீட செய்யப்பட்டதில் 2009ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை நியமனம் செய்யப்பட்டது எத்தனை பேர்? | 10 |
| 2. அதில் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் அல்லாத காலி பணியிட ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2009ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை மொத்தம் எத்தனை பேர்? நியமனம் செய்தது எத்தனை பேர்? எந்த தேதியில் விபரத்துடன் | 9 |
| 3. அதில் எத்தனை பேர் நாளது தேதயில் பணிபுரிந்து வருகின்றனர், எத்தனை பேர் இராஜினாமா செய்துள்ளனர், எத்தனை பேர் பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளனர்? | 9 பேர்<br>எவரும் இராஜினாமா செய்யப்படவில்லை<br>பணிநீக்கமும் செய்யப்படவில்லை. |
| 4. .தாழ்த்தப்பட்ட அருந்ததியர்களுக்கு காலிப் பணியிட ஒதுக்கீடு செய்யப்பட்டது 2009ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை மொத்தம் எத்தனை பேர்? நியமனம் செய்யப்பட்டது எத்தனை பேர்? எந்த தேதியில் விபரத்துடன் | 1 பணியிடம் நியமனம்<br>செய்யப்பட்டது-1<br>J.சுமதி என்பவர் 15.03.2010ல் சித்தார்பட்டி கணேசா நடுநிலைப் பள்ளியில் |
| 5. அதில் எத்தனை பேர் நாளது தேதியில் பணிபுரிந்து வருகின்றனர், எத்தனை பேர் இராஜினாமா செய்துள்ளனர்? எத்தனை பேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்? எந்த தேதியல் (விபரம் தெரிவிக்கவும்) | பணியில் இல்லை சித்தார்பட்டி கணேசா நடுநிலைப்பள்ளியில் நியமனம் செய்யப் பட்ட திருமதி.J.சுமதி என்பவர் 22.03.20 10ல் இராஜினாமா செய்துள்ளதால் பணிவிலகல் செய்யப்பட்டுள்ளது. |
| 6. கேள்வி எண்-5-க்கான இராஜினாமா செய்துள்ளவர்களின் விபரங்களின்படி விபரங்களின் படி இராஜினாமா செய்யப்பட்டதற்கான காரணம் என்ன? அரசு பணிவாய்ப்பு கிடைத்திருந்தால் அதனுடைய விபரம் தெரிவிக்கவும் | குடும்ப சூழ்நிலை காரணமாக<br>அரசு பணிவாய்ப்பு இல்லை |

| | |
|---|---|
| 7. கேள்வி எண் 5-க்கான இராஜினாமா செய்துள்ளவர்களின் விபரங்களின்படி இராஜினாமா செய்யப்பட்டதனை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அவர்களால் ஏற்று ஒப்புதல் அளித்துள்ள விபரம் தெரிவிக்கவும்? இராஜினாமா மீதான விசாரணை எதுவும் மேற்கொண்டு உள்ளாரா? இல்லை எனில் விசாரணை எதுவும் மேற்கொள்ளாமல் இராஜினாமானவர் எதன் அடிப்படையில் ஏற்று ஒப்புதல் வழங்கியுள்ளார்? அவ்வாறு விசாரணை எதுவும் மேற்கொள்ளாத ஒப்புதலினை உதவி தொடக்கக் கல்வி அலுவலர் ஏற்றுக் கொள்ளப்படலாமா? | தேனி மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ஓ.மு. எண்:1245/ஆ4/2010 நாள்:26.3.2010ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>நேரடி விசாரணை செய்யப்பட்டுள்ளது.<br><br>பிரச்சனை எழவில்லை. |

உதவி தொடக்கக் கல்வி அலுவலர்,
ஆண்டிபட்டி.

பெறுநர்:
திரு. வீரபாண்டியன்,
மாவட்ட செயலாளர்,
ஆதித்தமிழர் பேரவை 12 வது வார்டு
காந்தி நகர் முதல் தெரு,
அல்லி நகரம்,
தேனி-625531

அனுப்புநர்

வீர. பாண்டியன்,
மாவட்ட செயலாளர்,
ஆதித்தமிழர் பேரவை,
12வது வார்டு,
காந்தி நகர் முதல்தெரு
அல்லிநகரம், தேனி 625 531.

பெறுநர்

பொதுதகவல் அலுவலர் அவர்கள்,
மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் அலுவலகம்,
தேனி மாவட்டம்,
தேனி.

அய்யா,

பொருள்: தகவல்பெறும் உரிமைச்சட்டம் 2005ன்படி தகவல் கோருவது தொடர்பாக

தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் துவக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் ஆசிரியர் காலிபணியிடம் பணிநியமனம் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் (SCA)களுக்கு மற்றும் பிற இனத்தவர்களுக்கான பணியிட ஒதுக்கீடு செய்யப்பட்டது தொடர்பாக கீழ்க்கண்ட விபரங்கள் தகவல்பெறும் உரிமைச்சட்டம் 2005ன்படி கோரப்படுகிறது.

1. அரசு உதவிபெறும் துவக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் காலி பணி இடஒதுக்கீடு செய்யப்பட்டது 2009ம் ஆண்டுமுதல் நாளதுதேதிவரை மொத்தம் எத்தனைபேர்?

2. அதில் தாழ்த்தப்பட்ட அருந்ததியர் அல்லாத காலிப்பணி இடஒதுக்கீடு செய்யப்பட்டது 2009ம் ஆண்டு முதல் நாளது தேதிவரை மொத்தம் எத்தனைபேர்? நியமனம் செய்தது எத்தனைபேர்? (எந்ததேதியில் விபரத்துடன்)

3. அதில் எத்தனைபேர் நாளது தேதியில் பணிபுரிந்து வருகின்றனர்? எத்தனைபேர் இராஜினாமா செய்துள்ளனர்? எத்தனைபேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்? (விபரம் தெரிவிக்கவும்)

4. தாழ்த்தப்பட்ட அருந்ததியர்களுக்கு காலிபணி இடஒதுக்கீடு செய்யப்பட்டது 2009ம் ஆண்டு முதல் நாளதுதேதிவரை மொத்தம் எத்தனைபேர்? நியமனம் செய்யப்பட்டது எத்தனைபேர்? (எந்ததேதியில் விபரத்துடன்)

5. அதில் எத்தனைபேர் நாளதுதேதியில் பணிபுரிந்து வருகின்றனர்? எத்தனைபேர் இராஜினாமா செய்துள்ளனர்? எத்தனைபேர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்? (எந்ததேதியில் விபரம் தெரிவிக்கவும்)

6. கேள்வி எண்.5க்கான இராஜினாமா செய்துள்ளவர்களின் விபரங்களின்படி இராஜினாமா செய்யப்பட்டதற்கான காரணம் என்ன?அரசு பணிவாய்ப்பு கிடைத்துள்ளிருந்தால் அதனுடைய விபரம் தெரிவிக்கவும்?

7. கேள்விஎண்.5க்கான இராஜினாமா செய்துள்ளவர்களின் விபரங்களின்படி இராஜினாமா செய்யப்பட்டதனை மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் அவர்களால் ஏற்று ஒப்புதல் அளித்துள்ள விபரம் தெரிவிக்கவும்? இராஜினாமா மீதான விசாரணை எதுவும் மேற்கொண்டு உள்ளாரா? இல்லை எனில் விசாரணை எதுவும் மேற்கொள்ளாமல் இராஜினாமாவை எதன் அடிப்படையில் ஏற்று ஒப்புதல் வழங்கியுள்ளார்? அவ்வாறு விசாரணை எதுவும் மேற்கொள்ளாத ஒப்புதலினை உதவி தொடக்ககல்வி அலுவலர் ஏற்றுக் கொள்ளப்படலாமா?

இடம்: தேனி

நாள்: 13.2.2012

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

13/2/2012

# ஆர்ப்பாட்டம்

தேனி, மார்ச் 1-

அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட உள் இட ஒதுக்கீட்டை அரசு வேலைகளில் முறையாக நடைமுறைப்படுத்தக் கோரி, தேனியில் ஆதிதமிழர் பேரவை சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

மாவட்ட செயலாளர் பாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் ராசு முன்னிலை வகித்தார்.

மாநில பொதுச் செயலாளர் நாகராஜன், நகர தலைவர் சுரேஷ் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கிளை பொருப்பாளர்கள் பங்கேற்றனர்.

# ஆதித்தமிழர் பேரவையினர் ஆர்ப்பாட்டம்



அருந்ததியர்களுக்கு வழங்கிய உள் இட ஒதுக்கீட்டை அரசு வேலைகளில் முறையாக நடைமுறை படுத்தக்கோரி ஆதித்தமிழர் பேரவை சார்பில் தேனியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது எடுத்த படம்.

தினதந்தி 27-2-2012

அனுப்புநர்

வீர.புலிபாண்டியன்,
மாவட்டச் செயலாளர்,
ஆதித்தமிழ் பேரவை,
12-வது வார்டு,
காந்திநகர் முதல் தெரு,
அல்லிநகரம்.

பெறுநர்

உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்,

ஐயா.

பொருள் : தகவல் அறியும் உரிமைச்சட்டம் - 2005-ன் கீழ் சில விவரங்கள் கோருதல்

* * * * *

2005 தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கீழ்க்காணும் தகவல்களை அனுப்பும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1. அரசு உதவி பெறும் துவக்க, நடுநிலைப்பள்ளிகளில் 2009-ம் ஆண்டு முதல் SCA பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டவர்களது பெயர், முழுமுகவரி, பள்ளியின் பெயர், முழு முகவரி.
2. SCA (அருந்ததியர்) பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டவர் தொடர்ந்து பணியில் உள்ளாரா?
3. இல்லையெனில் பணி நீக்கம் செய்யப்பட்டாரா? இராஜினாமா செய்துள்ளரா? எந்த தேதியில்.
4. இராஜினாமா செய்துள்ளாரெனின் எந்த காரணத்திற்காக? அரசுப் பணி வாய்ப்பு கிடைத்துள்ளதாலா?
5. இராஜினாமாவுக்கு மாவட்டக் தொடக்கக் கல்வி அலுவலர் ஒப்புதல் வழங்கிய விபரம்.

இப்படிக்கு,

[signature]